1978 மார்ச் 14]

நெல்லித்துறை நீர் மின் திட்டம்.

*551 வினா— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோயம்புத்தூரில் நெல்லித்துறை நீர் மின் சக்தி உற்பத்தி திட்டம் இப்போது எந்த அளவில் உள்ளது ?

(ஆ) அது எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) மத்திய மின் அமைப்பின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) வேலைகள் துவங்கி ஐந்து ஆண்டுகளில் திட்டப்பணிகள் முடிவடையும்.

வள்ளுவர் கோட்டம்.

*552 வினா— திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் ஆராய்ச்சிக் கூடம் பணியாற்றத் தொடங்கி விட்டதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குறளைப்பற்றி பல்வேறு ஆராய்ச்சி நூல்கள் வந்திருக்கின்றன என்றாலும், இன்னும் சிறப்பான முறையில் ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு இந்த ஆராய்ச்சிப் பிரிவை வள்ளுவர் கோட்டத்தில் துவக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாடு முடிந்ததற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் மூன்று பல்கலைக் கழகங்களுக்கு மூன்று லட்சம் ரூபாய் நிதியையும் வழங்கி தனித்தனியாக திருக்குறள் ஆராய்ச்சிப் பிரிவை ஏற்படுத்த வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டு இப்போது செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் நான்காவது ஒரு ஆராய்ச்சி கூடம் வேண்டுமா என்ற பல்வேறு கருத்துக்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. அ. க. அரங்கநாதன் : வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் ஆராய்ச்சிக் கூடம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்கின்ற இந்த நேரத்தில், அண்ணா அவர்கள் எழுதிய நூல்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு வளளுவர் கோட்டத்தில் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை வைக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கேள்வி திருக்குறள் ஆராய்ச்சியைப் பற்றியது.

திரு. இ. கா. ராமலிங்கம் : தலைவர் அவர்களே, மதுரை பல்கலைக் கழகத்திற்கு திருக்குறள் ஆராய்ச்சிக்கு என்று ஒதுக்கிய நிதி அதற்காக சரியாக செலவிடப்படவில்லை என்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு புகார் அரசுக்கு வரவில்லை. அங்கு ஆறு ஆராய்ச்சி நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. திருவள்ளுவர் திருநாள் அன்று, மூன்று பல்கலைக் கழகங்களும் வெளியிட்ட 16 ஆராய்ச்சி நூல்களும் வெளியிடப்பட்டன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இப்படி லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டு திருக்குறள் ஆராய்ச்சி செய்கின்ற நேரத்தில், கல்லூரி மாணவர்களில் இப்படிப்பட்ட ஆராய்ச்சியில் முதன்மையாக தேர்வு பெற்றவர்களுக்கு உற்சாகம் ஊட்டக் கூடிய முறையில் இப்போது என்ன சலுகை கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இப்போது மூலக் கேள்வி திருக்குறள் ஆராய்ச்சியைப் பற்றியது. அதன் தொடர்பான பதில்கள் தான் இப்போது அளிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாணவர்களைப் பற்றி கேட்கிறார்கள். இதைப்பற்றி தனியாக கேள்வியை சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்தில் போட்டால் அவர்களுக்கு தகுந்த பதில் கிடைக்கும்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குறள் ஆராய்ச்சி நூல்கள் மிக அதிகமான விலையில் இருக்கின்ற காரணத்தினாலும், இதிலுள்ள விளக்கங்கள் மிகக் கடினமாக இருப்பதாலும், இதை சாதாரண ஏழை எளிய மக்கள் படித்து புரிந்து கொள்கின்ற வகையில், எளிய முறையில், மலிவான விலையில்-மலிவுப்பதிப்பாக வெளியிட்டு, ஏழை எளிய மக்கள் பயன் பெறுகின்ற வகையில் ஏதாவது வழிவகை செய்யப்படுமா ?

1978 மார்ச் 14]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : திருவள்ளுவரைப் பற்றியும், திருக்குறள் பற்றியும் நாட்டில் எந்தவிதத்தில் எல்லாம் பரப்பலாம், அதற்கு என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்பதைப்பற்றி முக்கியமான கருத்துக்கள் பரிசீலனையில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பற்றியும் பரிசீலிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. போ. கோபாலன் : உலகத் தமிழ் மாநாடு நடை பெற்ற பிறகு திருக்குறள் ஆராய்ச்சிக்கு என்று நிதி ஒதுக்கீடு செய்த பின்னுல், பல்கலைக் கழகங்களில் திருக்குறள் ஆராய்ச்சி நடைபெறுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பல்கலைக் கழகங் களில் அதற்கென்று தனியாக துறை ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இதுவரை பல்கலைக் கழகங்கள் வெளியிட்ட 16 புத்தகங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்தேன். ஆனல் மக்களிடத்தில் திருக்குறள் பற்றி அதிக அளவுக்கு பரப்பப் படவில்லை என்று தெரிகிறது. இனிமேல் அதற்கான முயற்சி களை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக்கொள்கி றேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

“உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு”

என்று வள்ளுவர் சொல்லியபடி, இந்த நாட்டில் பசி, பிணி, வறுமை இவைகள் எல்லாம் இல்லாதிருக்க வேண்டும். ஆனல், இன்று அட்சய பாத்திரங்களும், நோய் நொடியும் நாட்டில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, நாட்டில் பசி, பிணி, வறுமை இவை இல்லாதிருக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கேள்வி திருக்குறள் ஆராய்ச்சியைப் பற்றியது. வேறுள்ள விவரங்களுக்கு தனியாக கேள்வி போட்டால் சம்பந்தப்பட்டவர்கள் பதில் அளிக்க வசதி யாக இருக்கும்.

[முற்பகல் 9—10]

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, இந்த திருக்குறள் ஆராய்ச்சிக்காக சிதம்பரத்திலுள்ள அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டது. அதில் எத்தனை நூல்கள் இதுவரை வெளியிட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே. 1968-லே உருவாக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் திருக்குறள் ஆராய்ச்சிப் பிரிவுகள் எப்படி நடைபெறுகின்றன என்பதைப் பற்றி இதுவரை மக்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கிறது என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலிருந்து தெரிகிறது. இருந்தாலும் சொல்லுகிறேன். சென்னை பல்கலைக்கழகம் 6 நூல்களை வெளியிட்டிருக்கிறது. அண்ணாமலை பல்கலைக் கழகம் 4 நூல்களை வெளியிட்டிருக்கின்றது. மதுரை பல்கலைக்கழகம் 6 நூல்களை வெளியிட்டிருக்கின்றது.

*553 வினா—திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை வள்ளுவர் கோட்டத்தில் கால்கோள் விழா செய்த சாசனக்கல் பொருத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைப் பொருத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

(ஆ) தக்க இடத்தில் பதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தக்க இடத்திலே பதிக்கப்படும் என்று சொன்னார்கள். நன்றி. அப்போது கால் கோள் விழா செய்யப்பட்ட கல் ஜாக்கிரதையாக உள்ளதா ? பழைய கவர்னர் ஆட்சியின் போது அது அகற்றப்பட்டதாக சொல்லப்படுகிறதே, அதைப்பற்றியும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கால்கோள் விழா நடத்தியதைக் குறிக்கும் அந்தச் சாசனக்கல் இருந்த இடத்திலே சுற்றுச்சுவர் எழுப்புகின்றபோது, அஸ்திவாரம் போடப்பட்ட போது, அந்தக் கல் பத்திரமாக எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே, அதைப் பொருத்துவதிலே சங்கடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS